## தந்தை பெரியாரை நமக்குத் தந்த

# ஈரோடு - வரும் தேர்தலிலும் பெரு வெற்றியைத் தரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப். 4 –**

**"தந்தை பெரியாரை நமக்குத் தந்த ஈரோடு வரும் தேர்தலிலும் பெரு வெற்றியைத் தரும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபட தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் பதிவிட்டிருப்பதாவது:-

தந்தை பெரியாரை நமக்குத் தந்த ஈரோடு, வரும் தேர்தலிலும் பெரு வெற்றியைத் தரும்!

தமிழ்நாட்டுக்கு துரோகம் இழைத்த அனைவரும் சேர்ந்து அமைத்துள்ளதுதான் NDA கூட்டணி. பா.ஜ.க. உள்ளே புகுந்த எந்த மாநிலமும் வளர்ந்ததில்லை என்பதுதான் அவர்களின் ஒரே record!

NEET, CAA, NEP, கீழடி, கோவை மதுரை மெட்ரோ மறுப்பு, வரிப்பகிர்வில் வஞ்சனை என இவர்களிடம் இருப்பதெல்லாம் துரோகப் பட்டியல்தான்!

ஆனால், நம்மிடம் இருப்பது சொல்லித் தீராத சாதனைப் பட்டியல், இன்னும் நாம் செய்யவுள்ள வாக்குறுதிகளின் பட்டியல்.

Dravidian Model வளர்ச்சித் திட்டங்களைப் பட்டியலிட்டுச் சொல்வோம்! DMKManifesto 2026 அறிவிப்புகளை வீடுதோறும் கொண்டுசேர்த்து வெல்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.4.2026) ஈரோட்டில், தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் சங்கத் தலைவர் கனகராஜ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மண்பாண்ட தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து மண்பாண்டத்தை நினைவுப் பரிசாக வழங்கினார். உடன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி உள்ளார்.

## பீகாரில் நிதிஷ்குமார் நிலைதான் எடப்பாடி பழனிசாமிக்கும் ஏற்படும்!

# இந்தத் தேர்தல் ஆர்.எஸ்.எஸ். நாக்பூருக்கும் - கீழடி தமிழருக்கும் இடையிலான போர்!

## மானாமதுரை தேர்தல் பரப்புரையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**சிவகங்கை, ஏப்.4 –**

**சிவகங்கை மாவட்டம் மானாம துரை தேவர் சிலை அருகே மானா மதுரை சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமாரை ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலை வருமான கனிமொழி கருணாநிதி பரப்புரை செய்தார்.**

இத்தேர்தல் பரப்புரையில் கனி மொழி கருணாநிதி எம்.பி. பேசியதா வது:-

நம்முடைய முதலமைச்சரும், திமுகதலைவருமானமு.க.ஸ்டாலின் தேர்ந்தெடுத்து, உங்கள் கைகளில் இரண்டாவது முறையாக மானாம துரை தொகுதியில் வெற்றி வேட்பாள ராக தமிழரசியை ஒப்படைத்துள் ளார். நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து, இந்த பகுதியில் உள்ள பிரச்சினைகளை தீர்த்து வைக்கக்கூ டிய ஒரு வேட்பாளர்.

எந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டா லும் என்னுடைய தொகுதிக்கு வேண் டும் என்று வலியுறுத்தி பெற்றுத் தந்து, அதை நிறைவேற்றித் தரக்கூ டிய ஒருவர் தான் தமிழரசி. மிகச் சிறப்பாக மகளிர் அணியில் பணி யாற்றும் ஒரு சகோதரி.

அதே நேரத்தில், தேர்தல் அறிக்கை குழுவில் அவருடைய பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதற்காக, அவரை உறுப்பினராக முதலமைச்சர் நியமித்தார். தேர்தல் அறிக்கை தயா ரிக்கும் போதும் கூட, 'மானாமது ரைக்கு இது வேண்டும், அது வேண் டும்' என்று முதலில் தனது தொகுதியைப் பற்றிய அக்கறையுடன் போராடி, பின்னர் தமிழ்நாட்டைப் பற்றி சிந்திக்கும் அளவுக்கான ஒரு சட் டமன்ற உறுப்பினரை நீங்கள் பெற்றி ருக்கிறீர்கள்.

### தமிழர்களின் தாய்மடி கீழடி!

அப்படிப்பட்ட நம்முடைய தமிழர சிக்கு, தமிழ்நாடு வியந்து பார்க்கக்கூ டிய அளவிற்கு ஒரு மிகச் சிறப்பான வெற்றியை நீங்கள் உருவாக்கி காட் டுவீர்கள் என்று நான் உறுதியாக நம் புகிறேன். 'என்னுடைய பிரச்சாரத்தை எங்கு தொடங்கப் போகிறாய்?' என்று முதலமைச்சர் என்னிடம் கேட்ட போது, 'அதை நான் தமிழர்களின் தாய்மடியில் தொடங்க விரும்புகிறேன்' என்று தெரிவித் தேன். கீழடிதான் தமிழர்களின் தாய் மடி.

அந்த கீழடியில் மக்கள் பிரதிநிதியாக சட்டமன்ற உறுப்பினரா கப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற வர் சகோதரி தமிழரசி. நம்முடைய கீழடியைப் எடுத்துக் கொண்டால், இந்த உலகத்திற்கே தமிழ்நாட்டின் தமிழர்களின் பெருமையை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு பகுதிதான் கீழடி.

அங்கே நடைபெற்ற அகழ்வா ராய்ச்சிகள், உலகின் மூத்த குடிகளில் ஒன்றாக தமிழ்க்குடி இருப்பதை தெளிவாக அறிவியல் பூர்வமாக நிரூ பித்துள்ளன. அமெரிக்காவில் உள்ள 'பீட்டா அனலிடிக்ஸ்' நிறுவனத்தின் கார்பன் டேட்டிங் ஆய்வுகளின் மூலம் இந்தத் தரவுகள் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டன. அந்த ஆய்வு களின் அடிப்படையில் அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் தயாரித்து ஒன்றிய அரசாங்கத்திடம் வழங்கி, அதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட் டுக்கொண்டபோதும், அதை ஏற்க முடியாது என்று தெரிவித்தனர்.

அதை ஏற்றுக்கொண்டால், தமிழர் களின் பெருமையும் தமிழ் இனத்தின் பெருமையும் உலகத்துக்குத் தெரிய வரும். அதைத் தேர்தலுக்குத் தேர் தல் தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய பா.ஜ.க.வால் ஏற்றுக்கொள்ள முடி யாது. தொடர்ந்து, இந்தி மொழியை தமிழ்நாட்டு மக்கள் மீது திணித்து வரும் பா.ஜ.க.வாலும் அதை ஏற் றுக்கொள்ள முடியாது.

### ஆய்வறிக்கையை மாற்றச் சொன்ன பா.ஜ.க. அரசு!

ஆயிரக்கணக்கான கோடிகளை சமஸ்கிருத வளர்ச்சிக்காக தந்து விட்டு, தமிழுக்காக தருகிறேன் என்று கூறும் பா.ஜ.க.வால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழின் பெரு மையை உலகம் அறிந்து கொள்வ தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. 'உங்களுடைய ஆய்வறிக் கையை மாற்றிக் கொடுங்கள்; அப் போதுதான் பா.ஜ.க. ஏற்றுக்கொள் வோம்' என்று அவர்கள் கூறுகின்றனர்.

எங்களுடைய பெருமையை குறைச்சு சொல்லித் தமிழின் பெரு மையை உலகத்துக்குச் சொல்லும் இந்த ஆராய்ச்சியின் உண்மையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறியவர்களுடன் கூட்டணி வைத்தி



ருக்கும் இயக்கமே அதிமுக. அந்த அதிமுகவில் இருக்கும் ஒரு தமிழ னாக எடப்பாடி பழனிசாமி என்ன சொல்லியிருக்க வேண்டும்? 'இந்த ஆய்வறிக்கையை ஒன்றிய அரசாங் கமும், பாஜகவும், மோடியும் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று பெருமை யுடன் கூறியிருக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் சொன் னது போலவே அவர் கூறியிருக்க வேண்டும்.

ஆனால், 'தமிழ்நாடு அரசு ஆய்வ றிக்கையை மாற்றி, ஒன்றிய அரசாங் கம் கூறுவது போலவே மாற்றி எழுதி யுள்ளது' என்று கூறிய அந்த வெட்கக்கேடான கருத்துக்கு சொந்தக் காரர் எடப்பாடி பழனிசாமி. அவர் நினைக்கிறார் இந்தத் தேர்தல்ல பாஜக சொல்றபடியெல்லாம் கேட்டுத் தேர்தலை நடத்தினால் ஏதோ பத விக்கு கொண்டு வந்து உட்கார வச்சி ருவாங்கன்னு.

பீகாரின் முதலமைச்சராக இருந்த நிதீஷ் குமார் அவர்களின் நிலை என்ன என்பதை நினைத்துப் பாருங் கள். முதலமைச்சராக இருக்க வேண் டியவரை ராஜ்யசபா உறுப்பினராக மாற்றியுள்ளனர். எடப்பாடி பழனிசா மியின் நிலை என்னவாகும் என்று எனக்குத் தெரியவில்லை. உங்க ளுக்கு பிடித்த நல்ல ஊர் ஏதேனும் இருந்தால், அமித் ஷா அவர்களிடம் தெரிவித்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களை அதிகபட்சம் அங்கு ஆளு நர் ஆகத்தான் அனுப்புவார்கள்.

ஏனெனில், பா.ஜ.க. கூட்டணியில் இருந்த கட்சிகளின் நிலைமை என்ன ஆனது என்பது உங்களுக்குத் தெரி யும். நான் இதை கவலையுடன் சொல்கிறேன். தமிழ்நாட்டுக்கு ஒரு எதிர்க்கட்சி வேணும் இல்லையா? நமக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது. எதிர்க்கட்சி அவசியம் வேண்டும். குறைந்தபட்சம் எதிர்க்கட் சியாகவாவது நீங்கள் இருக்க வேண் டும் என்ற அந்த அக்கறையோடு கரிச னத்தோடு சொல்கிறேன்.

தயவு செய்து பத்திரமா பார்த்துக் கொள்ளுங்கள். நம்முடைய வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. நம்மளு டைய முதலமைச்சர் முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலினுடைய வெற்றி, திராவிட மாடல் ஆட்சியின் வெற்றி உறுதி செய்யப்பட்ட வெற்றி. மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய வெற்றி. அதில் எந்த மாற்றமும் இல்லை.

இந்தச் சட்டமன்றத் தொகுதியில் பாஜக தான் எதிரணியாக நிற்கிறது. இன்னும் வேட்பாளர் யார் என்பது தெரியவில்லை. ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கே தேர்தலைத் தாண்டி ஒரு போர் நடை பெற இருக்கிறது. ஆர்எஸ்எஸ்யின் தலைநகரமாகக் கருதப்படும் நாக்பூ ருக்கும், கீழடி தமிழர்களுக்கும் இடையிலான போர். இந்தத் தொகுதி யில் கீழடிக்கும் நாக்பூருக்கும் இடை யிலான போராட்டம் என்ற போர்.

அந்த ஒரு நிலைதான் இந்தத் தேர் தல் களத்தில் இருக்கிறது.

### முதல்வரின் வெற்றி திராவிட இயக்கத்தின் வெற்றி!

நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். நம்முடைய முதலமைச்சரின் வெற்றி, திராவிட இயக்கத்தின் வெற்றி, நம்முடைய கூட்டணியின் வெற்றி என்பது தமிழ் நாட்டுக்கான வெற்றி மட்டுமல்ல. நாம் பெறும் அந்த வெற்றி, இந்தியா வில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆன வெற்றி.

எங்களாலும் இந்தப் பிரிவினை சக்திகளை, மத நல்லிணக்கத்திற்கு எதிரான சக்திகளை, இந்த நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான சக்திகளை வென்று காட்ட முடியும் என்ற நம்பிக் கையை ஒவ்வொரு இந்தியனின் மனதிலும் விதைக்கும் ஒரு வெற்றி யாக இந்த வெற்றி இருக்கும் என்ற நம்பிக்கை நாம் அத்தனை பேருக் கும் இருக்கிறது.

எடப்பாடி பழனிசாமி அடிக்கடி சொல்கிறார். ஏதோ அவருடைய தேர் தல் அறிக்கையைப் பார்த்து நம்ம காப்பி அடிச்சுட்டோம்னு. அவர்களின் தேர்தல் அறிக்கையை மக்கள் படிப் பதே இல்லை. பாஜக ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்து, உங்களுக்குத் தரக்கூடிய ஆயிரம் ரூபாய் நிறுத்தப் போறாங்க. கோடை காலத்திற்காக இரண்டு ஆயிரம் ரூபாய் என்று சேர்த்து உங்களுக்கு ஐயாயிரம் ரூபாயை திமுக உங்கள் வங்கி கணக்குகளில் தந்தார்கள்.

அதைப் பார்த்தவுடனே எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குப் பயம் வந் துவிட்டது. இப்படியே போனால் என்ன ஆகும்?' என்று. அதனால், நம்மை பாத்து காப்பி அடிச்சு பத்தாயி ரம் ரூபாய் நான் கொடுக்கிறேன். அந் தப் பத்தாயிரம் ரூபாய் நீங்க ஆட்சிக்கு வரப்போறதுல குடுக்க போறதில்ல. அது மட்டும் இல்ல. நீங்க ஆட்சிக்கு வந்தபோதெல்லாம் கொடுத்த வாக்கு றுதிகளை மறந்தவர் என்பதை மக் கள் மறந்துவிடவில்லை.

உங்களுக்கெல்லாம் எமர்ஜென்சி காலகட்டம் நினைவிருக்கும். அது முடிந்து, ஆட்சி மாற்றங்கள் நடந்த பின்னர் நாட்டிற்கு ஒரு நிலையான ஆட்சி வர வேண்டும் என்று நம்மு டைய தலைவர் கலைஞர் முடிவு செய்தபோது, 'நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சியை தருக' என்று அன்னை இந்திரா காந்தி அம் மையாரை தமிழ்நாட்டுக்கு அழைத்து, 'உறவுக்கு கை கொடுப் போம், உரிமைக்கு குரல் கொடுப் போம்' என்று சொன்ன அந்த வாக்கி யத்தை, அந்த வாசகத்தை தன்னுடைய தேர்தல் அறிக்கை யிலே காப்பி அடிச்சு போட்டுருக்கக்கூ டிய அதிமுக.

அவர்களின் தேர்தல் அறிக்கை யின் பத்தாவது பக்கத்தில் அதை இடம்பெறச் செய்துள்ளனர். யாரு டைய வாசகங்கள்? நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் வாச கங்களையே காப்பி அடிச்சு தேர்தல் அறிக்கை தயாரித்து வைத்து, இன்று நம்மைப் பார்த்து அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயிரம் ரூபாயை வழங்கியது டன், அதை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவேன் என்று அறி வித்தவர் நம்முடைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்.

காப்பி அடிக்கலாம், ஆனால் யாரைப் பார்த்து காப்பி அடிப்பார்கள்? நல்ல மதிப்பெண்கள் பெறும் மாண வர்களையே பார்த்து காப்பி அடிப்பார் கள். தோல்வியடையப் போகும் மாணவரைப் பார்த்து யாராவது காப்பி அடிப்பார்களா?"

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

நீங்கள் பாஸ் ஆகப்போறது இல்ல. அதனால், உங்களை பார்த்து காப்பி அடிக்க வேண்டிய அவசியம் யாருக் குமே இல்லை. நம்முடைய முதல மைச்சரின் திராவிட மாடல் ஆட்சி யின் சாதனைகளாக ஒரு கோடி 31 லட்சம் பெண்களுக்கு 'கலைஞர் மக ளிர் உரிமைத் தொகை' வழங்கப்பட் டுள்ளது.

அடுத்த முறை ஆட்சி அமைந்தவு டன், அது இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

மகளிர் விடியல் பயணம், புது மைப் பெண் திட்டம், காலை உணவு திட்டம் போன்ற பல திட்டங்களை வழங்கியுள்ளார். அடுத்த முறை ஆட்சி அமைந்தவுடன், எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மானாமதுரையில் நிறைவேற்றித் தந்து இருக்கக்கூடிய திட்டங்கள். அரசு கலைக் கல்லூரி, கண்மாய்கள் சீரமைத்து தரப்பட்டிருக்கிறது. வைகை ஆற்றின் குறுக்கே ரூ. 47 கோடி செலவில் இரண்டு அணைக் கட்டுகள் கட்டப்பட்டு கட்டிக்குளம், மிளகனூர் மானாமதுரை கிராமம், கீழப்பசளை மற்றும் பிற கண்மாய்க ளுக்கு தண்ணீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மானாமதுரை நாட்டார் கால்வாய் திட்டத்திற்கு 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தத் திட்டமும்நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தி.மு.க. வேட்பாளர் தமிழச்சி அவர்களுக்கு உதய சூரியன் சின் னத்திலே வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர், கழக வேட்பாளர் முனைவர். பி.பழனியப்பன் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். உடன் கூட்டணி கட்சியினர் இருந்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் திருவையாறு சட்டமன்றத் தொகுதியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளரும், கழக வேட்பாளருமான துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வாக்குச் சேகரித்தார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள் கல்லணை செல்லகண்ணு, சு.முருகானந்தம், சிவசங்கரன், கவுதமன், அரசாப கரன், அசோக்குமார் உள்ளிட்ட பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.